**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 680/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 12.11.2025.**

| Name : மாதைய்யன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து கடை நடத்தி வருகிறேன். நான் எம்.கே.எம் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வரும் நிலையில் எங்கள் கடைக்கு சித்துராஜ் என்பவர் பொருட்கள் வாங்கிவிட்டு பணம் தராமல் சென்றுவிடுவார். நான் பணம் கேட்ட போது பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 25.08.2024ம் தேதி இரவு 09.15 மணிக்கு நானும் என் மகனும் கடையை பூட்டுவதற்காக எடுத்து வைத்து கொண்டிருந்தோம்.

2) அப்போது சித்துராஜ் வந்து பசை பாக்கெட் கேட்டார். என்மகன் ரூ.30/- கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு சித்துராஜ் கண்டபடி கண்டார ஒலி தெவிடியா பையா என்று திட்டினார். கடையிலிருந்த பாட்டிலை உடைத்துவிட்டு என் மகனை குத்த வந்த போது நான் தடுத்தேன். கடையிலிருந்த கடலை உருண்டை வைத்திருந்த பாட்டிலை தூக்கி உடைத்து மற்ற பொருட்களை சேதப்படுத்தினார். அக்கம் பக்கம் உள்ளவர்களை பார்த்து ஓடிவிட்டார். தற்போது வரை கடையை திறக்க பயமாக உள்ளது. இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு**

**அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரி அடித்ததாக திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) எத்தனை வருடமாக நான் கடை நடத்தி வருகிறேன் என்றால் 39 ஆண்டு காலமாக நடத்தி வருகிறேன். கடை வீதியில் கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரி என் கடையில் அடிக்கடி பொருட்கள் வாங்கிக் கொண்டு பணம் தராமல் சென்றுவந்தார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் எந்தெந்த தேதியில் அது போல் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. காலை 8 மணிக்கு கடையை திறந்து இரவு 09.30 லிருந்து 10 மணிக்குள் கடையை மூடுவோம்.

4) என் கடைக்கு அருகிலும் எதிரிலும் சுமார் எத்தனை கடைகள் இருக்கும் என்றால் 10 கடை இருக்கும். நான் சொன்ன சம்பவம் சுமார் 15 நிமிடத்திற்கு மேல் நடந்திருக்கும் அப்போது அங்கு யார் இருந்தார்கள் என்றால் நான் மற்றும் என் இரு மகன்கள் இருந்தோம். சம்பவம் நடந்தவுடனே காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் அப்போது காவல் உதவி ஆய்வாளராக இருந்த மாதுராஜ் என்பவருக்கு போன் மூலமாக தகவல் கொடுத்தேன்.

5) சிறிது நேரத்தில் உதவி ஆய்வாளர் வந்துவிட்டார். அவர் வந்த சமயத்தில் ஆஜர் எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து புகார் அளித்தேன் என்றால் 25ம் தேதி சம்பவம் நடைப்பெற்றது நான் 27ம் தேதி புகார் கொடுத்தேன். யார் யார் சென்று புகார் அளித்தோம் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். புகாரை எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தேன்.இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 27ம் தேதி நண்பகல் 12 மணியளவில் கடைக்கு வந்து நேரடியாக விசாரித்தார்கள்.

6) என்னை விசாரிக்கும் போது என் மனைவி, என் மகன்கள் கண்ணன், நடேஷ்ராஜா, சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்தார்கள். புகார் கொடுக்கும் போது உடைந்த கண்ணாடி பாட்டில் துண்டுகளை கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் கடையில் நடந்த சம்பவத்தை வீடியோ பதிவுகள் மூலமாக போலீசாரிடம் கொடுத்தேன்.

7) நான் கொடுத்த புகாரில் சேதமதிப்பை குறிப்பிட்டு புகார் அளித்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில், சொல்லும் விதத்தில் சம்பவம்

நடைபெறவில்லை என்றாலும் எதிரி எங்கள் கடையில் வாங்கிய பொருட்கள் தரம் குறைவாக உள்ளதாக என்னிடம் முறையிட்டதால் நான் எதிரி மீது தவறுதலாக புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் அடுத்த நாளே காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றும் எதிரியால் சேதமான பொருட்களையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி என் மகனிடம் எந்தவிதமான தகராறும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.13 15:13:16 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 680/2024**

**Prosecution witness : அ.சா.2** **Date : 12.11.2025.**

| | |
|---|---|
| **Name : நடேசராஜா** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து என்தந்தை கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா ஆவார். அ.சா.1 எம்.கே.எம் ஸ்டோர்ஸ் என்ற பெயரில் கடை ஜலகண்டாபுரத்தில் நடத்தி வருகிறார். எங்கள் கடைக்கு சித்துராஜ் என்பவர் பொருட்கள் வாங்கிவிட்டு பணம் தராமல் சென்றுவிடுவார். நான் மற்றும் அப்பா பணம் கேட்ட போது பிரச்சனை ஏற்பட்டது. கடந்த 25.08.2024 ம் தேதி இரவு 09.15 மணிக்கு நானும் என் அப்பாவும் கடையை பூட்டுவதற்காக எடுத்து வைத்து கொண்டிருந்தோம்.

2) அப்போது சித்துராஜ் வந்து பசை பாக்கெட் கேட்டார். நான் ரூ.30/- கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கு சித்துராஜ் கண்டபடி கண்டார ஒலி தெவிடியா பையா என்று எங்கள் இருவரையும் திட்டினார். கடையிலிருந்த பாட்டிலை உடைத்துவிட்டு என்னை அடிக்க வந்த போது என் அப்பா தடுத்தார். வெட்டி விடுவேன் என்றும் குடும்பத்துடன் காலி செய்து விடுவேன் என்று மிரட்டினார். அக்கம் பக்கம் உள்ளவர்களை பார்த்து ஓடிவிட்டார். இது சம்மந்தமாக அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தார். ஆஜர் எதிரி அடித்ததாக திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) நான் கடந்த 7, 8 மாதங்களாக என் தகப்பனார் கடையில் முழு நேரமும் வியாபாரத்தை பார்த்து வருகிறேன். அதற்கு முன்பாக கல்லூரி சென்றுவிட்டு மற்ற நேரத்தில் வியாபாரத்தை பார்த்து வந்தேன். என் அண்ணன் கண்ணன் இரண்டு, மூன்று வருடங்களாக என் தகப்பனார் கடையில் முழுநேர வியாபாரம் செய்து வருகிறார். ஆஜர் எதிரி கடைக்கு வந்து பணம் தராமல் செல்வார் என்று சொல்லியுள்ள நிலையில் எந்தெந்த சமயம் அவ்வாறு பணம் தராமல் சென்றார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் தற்போது நினைவில்லை.

4) சம்பவம் நடந்த சமயம் எதிரி கடைக்கு வந்த போது நானும், அண்ணன், அப்பா ஆகியோர் இருந்தோம். சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 10 லிருந்து 15 நிமிடம் நடந்திருக்கும். பிரச்சனை நடந்தவுடன் போலீசாருக்கு தகவல் கொடுத்தோமா என்றால் என் தகப்பனார் போலீசாருக்கு தகவல் கொடுத்ததன் பேரில் காவல் உதவி ஆய்வாளர் மாதுராஜ் என்பவர் சம்பவயிடம் வந்தார். புகார் அளிக்கும் போது நான் என் தந்தையுடன் சென்றேனா என்றால் இல்லை. வழக்கு சம்மந்தமாக என்னை என்று போலீசார்விசாரித்தனர் என்றால் 27 ம் தேதி விசாரித்தனர் நேரம் நினைவில்லை.

5) நான் முதல் விசாரணையில் சொன்னவற்றை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். சம்பவம் நடந்து 1 நாள் கழித்து என் தகப்பனார் புகார் அளித்தார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில், சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எங்கள் கடையில் வாங்கிய பொருட்கள் தரம் குறைவாக உள்ளதாக அ.சா.1 இடம் முறையிட்டதால் அ.சா.1 எதிரி மீது தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் அடுத்த நாளே அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பார் என்றும் எதிரியால் சேதமான பொருட்களையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி என்னிடம் எந்தவிதமான தகராறும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.13 15:13:23 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 680/2024**

**Prosecution witness : அ.சா.3** **Date : 12.11.2025.**

| | |
|---|---|
| **Name : பாலாஜி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மின்சாரம் சம்மந்தமாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனக்கு தெரிந்தவர்கள் ஆவார்கள். சித்துராஜ் என்பவர் பொருட்கள் வாங்கிவிட்டு பணம் தராமல் சென்றுவிடுவார். கடந்த 25.08.2024ம் தேதி இரவு 09.15 மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 கடையை பூட்டுவதற்காக எடுத்து வைத்து கொண்டிருந்த போது சித்துராஜ் வந்து பசை பாக்கெட் கேட்டார். பிறகு சித்துராஜ் கண்டபடி கண்டார ஓலி தெவிடியா பையா என்று திட்டியதாக கேள்விப்பட்டேன். கடந்த 27.07.2024ம் தேதி மதியம் 12.00 மணிக்கு ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தார் சம்பவயிடம் வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நான் மற்றும் அர்த்தனாரி இருவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ-2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

2) நான் கையொப்பம் செய்த தாளில என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி என்று யார் சொல்லி கேள்விப்பட்டேன் என்றால் 26 ம் தேதி அ.சா.1 சொல்லி தெரியும். போலீசார் விசாரிக்கும் போது சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியும் என்றும் சம்பவம் நடந்த அன்றே சம்பவம் குறித்து தெரியும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனக்கு என்ன உறவு என்றால் மச்சான். என் அக்கா கணவர் ஆவார். யார் யார் கையொப்பம் செய்தோம் என்றால் நானும் என் அண்ணனும் கையொப்பம் செய்தோம். அசா.1 நெருங்கிய உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.13 15:13:29 +0530

Judicial Magistrate No.II,
Mettur.